இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,
சட்மாணிப்பட்டப்படிப்புத் திட்டம் - மட்டம் 5
இறுதிப்பரீட்சை 2006/2007,
பகிரங்க சர்வதேச சட்டம் - LWU 3315/4312/4335
காலம் : 3 மணித்தியாலங்கள்.

திகதி: 26.03.2007
நேரம்: மு.ப 9.30 - ந.ப 12.30

ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. பெனிற்றோ சாவேஸ், ஜிப்சியஸ் ஐக்கிய நாடுகள்(USG) மற்றும் பென்வர் ஜனநாயக குடியரசு ஆகிய இரண்டு நாடுகளினதும் இரட்டை பிரஜா உரிமையை கொண்டுள்ள பிரபல்யமான போதைப் பொருள் மற்றும் ஆயுதக்கடத்தல்களில் ஈடுபடுபவன் ஆவான். அவன் 1975ஆம் ஆண்டில் இருந்து USG இல் வசித்துவருகின்றான். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பேள் தீவின் பிரஜையான தனது மைத்துனர் கருமாவுடன் சேர்ந்து பேள் அரசில் தனிநாடு கோரி போராடும் பயங்கரவாத குழுவொன்றிற்காக பென்வரில் இருந்து விமானம் தாக்கும் ஏவு கணைகளை கடத்த பெனிற்றோ முயற்சி செய்தான். அவர்கள் 15 ஏவுகணைகளை வாங்கியதுடன் நாடா அரசிற்கு அவற்றை பெனிற்றோ கொண்டு வந்தான். அங்கிருந்து அதனை பயங்கரவாத குழுவிற்கு ஒப்படைக்க திட்டமிடப்பட்டு இருந்தது. ஆயுத கடத்தல் குற்றத்தின் மீது நாடா அரசின் பாதுகாப்பு அதிகாரிகள் பெனிற்றோவையும் பயங்கரவாத அமைப்பை சேர்ந்த இரண்டு முகவர்களையும் கைது செய்தனர்.

அதே வேளை USG இல் இருந்த கருமா தன்னை பொலிஸார் பின் தொடர்வது பற்றிய தகவல்களை பெற்றதுடன் தப்பிச்சென்று தனது மைத்துனரை காப்பாற்றுவ தற்காக திட்டமிட்டான். பியாமி அரசிற்குள் உட்பிரவேசிப்பதற்காக விசாபெற கருமா போலியாவணங்களை தயார் செய்தான். பியாமி அரசிற்கு பயணம் செய்து கொண்டு இருந்த வேளை பியாமியின் விமான நிலையத்திற்கு உரித்தான விமான இலக்கம் 85 பியாமி விமானத்தை திசை திருப்பியதுடன் நாடா அரசின் கிழக்கு பகுதியில் தரை இறக்குமாறு வற்புறுத்தினான். 105 பயணிகள் மற்றும் விமானப்பணியாட்களை அவன் பணயத்தில் எடுத்ததோடு பெனிற்றோவையும் பயங்கரவாத குழுவின் முகவர்களையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு கோரியதுடன் தன்னை மறைவான ஒரு இடத்திற்கு பாதுகாப்பாக அழைத்துச் செல்லுமாறு கோரினான். அதிகாரிகளுடன் நடைபெற்ற வெற்றிகரமான பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து கருமா பணயக்கைதிகளுடன் விமானத்தை விடுவித்தான். எனினும் அவன் தப்பியோடி கப்பிஸ்தான் ஆட்புல எல்லைக்குள் உட்பிரவேசித்தான். அங்கு அவன் அரசியல் புகலிடம் கோரினான்.

ஏனைய அரசுகளுடன் ஒப்பிடும்போது குற்றம்சாட்டப்பட்டவர் மீது எந்த நாட்டிற்கு நியாயாதிக்கம் கோரும் முன்னுரிமை உள்ளது என்பது பற்றிய ஆலோசனையை வழங்குவதுடன் தரப்பட்ட வழக்கில் தலையிட்டுள்ள நியாயாதிக்கம் தொடர்பான விடயங்களை ஆராய்க. உமது விடையை சட்டபூர்வமான அதிகாரங்களுடன் ஆதாரப்படுத்துக.

2. சர்வதேச நீதிநியாய மன்றம் (ICJ) தனது 60வது பிறந்த தினத்தை 2006ஆம் ஆண்டு கொண்டாடியது. சர்வதேச சட்டத்தின் ஊடாக ICJ வுடைய விலைமதிக்க முடியாத 60வருட காலப் பங்களிப்பை நிலைநாட்டு முகமாக ஐக்கியநாட்டு சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'சர்வதேச சட்டம் மற்றும் நீதி என்பவற்றின் தற்கால சவால்கள்' மீதான உலகலாவிய மகாநாட்டில் விரிவுரையாற்ற சின்பாற் வெளிவிவகார அமைச்சர் திரு வினோட் கரீம் அழைக்கப்பட்டார். தரவுகளை அவதானித்த (இற்றைவரையான 92வழக்கு தீர்ப்புக்கள் மற்றும் 25 ஆலோசனைசார் கருத்துக்கள்) திரு கரீம்முக்கு ICJ இன் உண்மையான பங்களிப்பு பற்றி சந்தேகம் ஒன்று எழுந்தது. இன்னும் 60 வருடங்களில் வினைத்திறன் மிக்க சர்வதேச நீதிமன்றம் ஒன்றிற்கான அதனுடைய வினைத்திறன் ஆலோசனைகள் மற்றும சிபாரிசுகள் என்பவற்றுடன் கூடிய ICJ பற்றிய உரையொன்றை தயார் படுத்துவதற்காக அவர் உமது உதவியை நாடுகிறார்.

நகல்வரைபை தயாரிக்குக.

3. (அ) வர்த்தக தொடர்புகளின் அபிவிருத்தி காரணமாக அரச விடுபாட்டுஉரிமை(State immunity) பெருமளவில் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு கருத்தேற்பாகும். எவ்வாறாயினும் அரசுகளினது பரபரப்பான விடயங்களுக்கு (உதாரணம்: மனிதாபிமானத்திற்கான எதிரான குற்றங்கள்) அவதானம் வழங்குகின்ற அரசுகளின் அண்மைக்கால நடத்தைகளை கருத்தில் எடுக்கின்ற போது இக்கருத்தேற்பு மேலும் மட்டுப்படுத்தப்பட வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

மேற்போந்த கூற்றை விமர்சித்து பகுப்பாய்வு செய்க.

(ஆ) 1990ஆம் ஆண்டு யமலாந்தின் இரண்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக மாரபுத்திரா தேர்ந்தெடுக்கப்பட்டபட்டான். அயல் நாடான திவாலாந்தில் இனப்படுகொலை மேற்கொண்டு வரும் தனிநாடு கோரி போராடும் பிரித்தாஸ் அமைப்பிற்கு ஆதரவு வழங்கியமை என்ற சர்வதேச சமூகத்தால் சுமத்தப்பட்ட குற்றத்தின் காரணமாக மேற்கொள்ளப்பட்ட பாரதூரமான அழுத்தத்தின் பின்பு அவன் 1991ஆம் ஆண்டு தனது பதவியில் இருந்து விலக வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானான். சூழ்ச்சியொன்றினை அடுத்து மாரபுத்திரா 1994ஆம் ஆண்டு யமலாந்தின் ஜனாதிபதித்துவத்தை மீள பெற்றுக்கொண்டான். 1991 – 1994 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அவன் பிரித்தாஸின் இராணுவப்படையில் இணைந்து கொண்டதுடன் திவாலந்தின் பயங்கரவாத நடவடிக்கைகளில் பங்கு பற்றினான். இவ் அமைப்பின் அங்கத்துவன் ஒருவன் என்ற வகையிலும் யமலாந்தின் ஜனாதிபதி என்ற வயிலும் அவனால் புரியப்பட்ட குற்றவியல் நடவடிக்கைகள் மற்றும் பிரித்தாஸ் அமைப்பிற்கு உதவிவழங்கியமை போன்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் மாரபுத்திராவுக்கு எதிராக திவாலாந்தின் ஊடகவியலாளர் குழு ஒன்று தேசிய நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கை ஒன்றை தாக்கல் செய்தது.

மாரபுத்திராவுக்கு ஆலோசனை வழங்குக.

4. (அ) சர்வதேச சட்டத்தினுடைய மூலத்தோற்றுவாய் என்ற வகையில் நாகரீகமடைந்த சமூகங்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள சட்டத்தின் பொதுக்கொள்கைகளின் பிரயோகத்தினை ஆராய்க.

(ஆ) "செற்றலைட்டினால் பிடிக்கப்பட்ட படங்கள் மற்றும் தகவல்களின் அதிகாரம் அளிக்கப்படாத பயன்பாடு" மீது சில கோட்பாடுகளை கோவைப்படுத்துவதற்காக சமவாயம் ஒன்றை சர்வதேச தொலைத்தொடர்புகள் அமைப்பு (ITU) தயாரித்தது. இச்சமவாயம் கைச்சாத்திடலுக்காக தற்போது திறந்து இருப்பதுடன் இச்சமவாயத்தின் ஏற்கையில் பங்குபற்றிய 56 நாடுகள் அவ்வுடன்படிக்கையை கைச்சாத்திடும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றன. இராஜரீக மகாநாட்டில் கலந்துகொள்ளாத கொக்கோ குடியரசு இவ்வுடன்படிக்கையை ஏற்கலாமா என்பது பற்றி ஆலோசிக்கின்றது. எனினும் 'அவசரகால நிலைமையொன்றின் போது ஏனைய அரசுகளுடன் வகைப்படுத்தப்படாத தகவல்களை பகிர்ந்து கொள்ளல்' (சமவாயத்தின் உறுப்புரை 10 (a) ) என்ற ஏற்பாட்டுடன் அவ்வளவாக உடன்படவில்லை. அத்துடன் உறுப்புரை 10 (a)இல் குறித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனை கொக்கோ குடியரசை பிணிக்காது என்ற நிபந்தனை அடிப்படையில் சமவாயத்தை கையொப்பமிட திர்மானித்தது. கொக்கோ குடியரசிடம் இருந்து பெருமளவான வெளிநாட்டு உதவிகளை பெறுகின்ற அபிவிருத்தி அடைந்து வரும் சேலானிக்கா அரசு கொக்கோவினுடைய தீர்மானத்திற்கு ஆதரவளித்த அதே வேளை லில்லி அரசு கொக்கோவுடைய முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்தது. அபிவிருத்தி அடைந்து வரும் இன்னுமொரு அரசான திரோயி தனக்கும் கொக்கோவுக்கும் இடையில் உறுப்புரை 10 (a) பிரயோக்கப்படாது என்ற அடிப்படையில் கொக்கோவினுடைய முடிவுக்கு ஆதரவு அளித்தது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அரசுகளில் இந்த சமவாயத்தினுடைய பிரயோகத்தின் விளைவுகளை ஆராய்க. (கைச்சாத்திட்ட திகதியில் அல்லது பின்னைய ஒரு திகதியில் சமவாயத்தின் ஏற்பாடுகளின் பிரயோகம் தொடர்பான கருத்து விளக்கங்கள் அல்லது மாற்றங்களை எந்த ஒரு அரசிற்கும் வழங்குவதற்கான அனுமதியை சமவாயத்தின் உறுப்புரை 29 வழங்குகிறது என்பதை கருத்தில் கொள்க) 1969ஆம் ஆண்டின் பொருத்தனைகள் மீதான வியன்னா சமவாயத்தின் ஸ்தாபிக்கப்பட்டுள்ளவாறான அரச திறத்தவர்களின் கடப்பாடுகளுடன் உமது விடை தொடர்பு படுத்தல் வேண்டும்.

5. 'ஐக்கிய நாடுகள் பட்டயத்தின் உறுப்புரைகள் 2(4) மற்றும் 51 என்பவற்றினூடாக ஒரு அங்கத்துவ அரசு, தனக்கு எதிராக இன்னுமொரு அங்கத்துவ அரசினால் அச்சுறுத்தல் அல்லது ஏதேனும் வகையான பலாத்காரம் பிரயோகிக்கப்படும் என்ற சந்தேகத்தில் அத்தகைய அரசிற்கு எதிராக அச்சுறுத்தலையோ அல்லது பலாத்காரத்தை பிரயோகித்தலையோ ஒரு போதும் அனுமதிப்பது இல்லை'

இக்கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா. உமது விடைக்குரிய காரணங்களை தருக.

6. 35 வருட கால போராட்டத்தின் பின்பு வேர்ஜின் குடியரசிடம் இருந்து 'டிட்டிக்கோ' தீவு தனது சுதந்திரத்தை பெற்றுக்கொண்டாள். முடிசூட்டு விழாவின் போது டிட்டிக்கோவுடன் நட்புரீதியான தொடர்பை ஆரம்பிக்குமாறு புதிய அரசனான விஷ்கேஷ் அனைத்து சர்வதேச சமூகத்திற்கும் திறந்த அழைப்பு ஒன்றை விடுத்தான். வேர்ஜின் குடியரசினால் டிட்டிக்கோ சார்பாக முன்னர் பொறுப்பேற்கப்பட்ட எந்த வகையான கடப்பாடுகளுக்கும் அந்த சந்தர்ப்பத்தில் இருந்து தான் மதிப்பளிக்கப் போவதில்லை என மதிப்பிற்குரிய அரசன் குறிப்பிட்டான். மேலும் டிட்டிக்கோ சார்பாக வேர்ஜின் குடியரசினால் ஈடுபட்டுள்ள ஏனைய கடப்பாடுகள் மற்றும் டிட்டிக்கோவுடைய கடன்பொறுப்பான 5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்பவற்றை இங்கு குறிப்பாக சுட்டிக்காட்டினான். சுதந்திரப் போராட்டத்தின் போது வெளிநாட்டவர்களுக்கு ஏற்பட்ட ஆள், ஆதனங்களுக்கு எற்பட்ட இழப்பீடுகளை ஈடுசெய்வதற்கு எந்த விதமான சாத்தியத்தன்மையும் இல்லை என அவன் மேலும் குறிப்பிட்டான். தீவை மீண்டும் கைப்பற்றுவதற்கான சாத்தியமான முயற்சிகளை முறியடிப்பதற்காக தீவைச் சுற்றிய கடற்பரப்பில் 1200 Nm வரையான பிரதேச எல்லைக்குள் கடல் கண்ணிவெடிகளை புதைப்பதற்கான கட்டளையை வழங்கினான். சில நாட்களின் பின்பு விராக்கில் இருக்கும தமது படையினருக்காக ஆயுதங்களை ஏற்றி வந்த டைட்டானிய யுத்தக்கப்பல் டிட்டிக்கோவினுடைய கரையோரத்திற்கு அண்மித்த கடல் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட இடத்தில் சிக்குண்டு கப்பலில் இருந்த அனைவரும் இறந்தனர். பொறுப்புடமையை ஏற்க டிட்டிக்கோ மறுக்கின்றது.

மேலே குறிப்பிட்ட சூழ்நிலையில் தலையிட்டுள்ள சட்ட விடயங்களை ஆரய்க.

7. "... ஜனாதிபதி 'எழுதப்பட்ட சட்டம் அல்லது அரசியலமைப்பு ஏற்பாடுகளுடன் முரண்படுகின்ற' விடயங்களை உள்ளடக்கியுள்ள பொருத்தனை ஒன்றில் ஈடுபடல் அல்லது சமவாயமொன்றை ஏற்று அங்கீகரிக்கின்ற போது அது மேலே குறிப்பிடப்பட்ட உறுப்புரை 33(f) ன் மட்டுப்பாட்டிற்கு எதிராக வருவதுடன் வலுவிகழ்ந்ததாக வரும். ஜனாதிபதியினுடைய அத்தகைய செயல் குடியரசை நிபந்தனை அடிப்படையில். *(qua state)* பிணிக்காது. மேலே குறிப்பிடப்பட்ட இருமைவாத கொள்கைக்கு அமைய இம்முடிவு பெறப்படவில்லை ஆயினும் அரசாங்க அதிகாரத்தின் பிரயோகம் மற்றும் அரசியல் அமைப்பின் உறுப்புரைகள் 3, 4 மற்றும் 33(f) என்பவற்றில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளவாறான இறைமை என்ற அமைப்பின் மட்டுப்பாடுகளுக்கு அவதானம் வழங்கப்பட்டுள்ளது..."

Sarath N Silva, C.J. in Nallarathnam Sinharasa vs the Attoney General, S.C.Spl. (LA) No 182/99(unreported) decided on 15.09.2006

தேசிய சட்டமுறைமைகளுக்குள் சர்வதேச சட்டப்பிரயோகத்தின் நடைமுறை அணுகுமுறைகள் என்ற அமைப்புடன் தொடர்புறுத்தி மேற்போந்த கூற்றை விமர்சித்து மதிப்பிடுக.

8. 'அரசநிலை என்பதன் பிரதான அம்சமாக அமைந்த 'அரசுகளின் இறைமை' என்ற கருத்தேற்பு மாயை ஒன்றாக வந்துள்ளது'.

கருத்துரைக்க.

(பதிப்புரிமைபெற்றது)